1994 நவம்பர் *7*]

மணலூர்ப்பேட்டையில் விளைபொருள் விற்பனைக் கூடத்திற்குக் கட்டிடம் கட்டத் தீர்மானித்து, மணலூர்ப்பேட்டை அகஸ்தீஸ்வரர் ஆலயத்திற்குச் சொந்தமான நிலத்தினை வாங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

32—

நெல்லிக்குப்பம் தொகுதியில் தொழில் வளாகம் அமைத்தல்.

***34245*–திரு. எம்.சி. தாமோதரன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லிக்குப்பம் தொகுதியில் மேல்கவரப்பட்டு அருகே தொழில் வளாகம் அமைத்திடும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

35—

தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் தற்காலிக கல்விசாராப் பணியாளர்களைப் பணி நிரந்தரம் செய்தல்.

***9129*–திரு. சோ. இராசாராமன் :**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் பணிபுரியும் தற்காலிக கல்விசாராப் பணியாளர்கள் எத்தனை பேர் ?

(ஆ) அவர்களின் பணியை நிரந்தரம் செய்ய அரசு முன்வருமா ?

[*1994 நவம்பர் 7*

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) தற்காலிக கல்வி சாராப் பணியாளர்கள் மொத்தம் 30 பேர்.

(ஆ) தற்போது நிதி நிலை நெருக்கடி உள்ளதால், நிதி நிலையில் முன்னேற்றம் ஏற்படும்போது, தேவைக்கேற்ப தற்காலிகப் பணியாளர்களைப் பணி நிரந்தரம் செய்வது தொடர்பாகக் கருதப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

அனுமதியின்றி ஒரு பிரச்சினையை எழுப்புதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அண்மையில் பெய்த மழை மற்றும் புயல் காரணமாக . . . . . (குறுக்கீடு)

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் ரொம்ப முக்கியமான ஒரு பிரச்சினையை இங்கே எடுத்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) அது இல்லை. (குறுக்கீடு) நீங்கள் என்னிடம் வந்து கேட்டீர்கள். (குறுக்கீடு) அதுவே இல்லை. (குறுக்கீடு) இப்படி கை தூக்குவது முறையில்லை. (குறுக்கீடு) அவர்கள் பேசியது எதுவும் அவைக் குறிப்பில் இருக்காது. (குறுக்கீடு) நீங்கள் என்னிடம் வந்து கேட்டீர்கள். வந்து கேட்டபோதே, இது தனிப்பட்ட பிரச்சினை, இதை அனுமதிப்பதற்கு இல்லை என்றேன். (குறுக்கீடு) பத்திரிகையில் எவ்வளவோ பிரச்சினைகள் வருகின்றன. பத்திரிகையில் வந்ததையெல்லாம் இங்கே எழுப்ப முடியாது. (குறுக்கீடு) இல்லை. பத்திரிகையிலே வருகிற பிரச்சினையையெல்லாம் இங்கே எழுப்ப முடியாது. (குறுக்கீடு) இதற்கு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS